## திருமதி சோனியாகாந்தி அம்மையார்

# விரைவாகவும், முழுமையாகவும் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலை தளப் பதிவு!

சென்னை, மார்ச் 27 - முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு: -

**நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மரியாதைக்குரிய திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் செய்தியறிந்து கவலை கொள்கிறேன்.**

**மரியாதைக்குரிய திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள் விரைவில் நல்ல உடல்நலத்துடன் திரும்புவார் என உறுதியாக நம்புகிறேன். அவர் விரைவாகவும், முழுமையாகவும் நலம் பெற விழைகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## மார்ச் 30-ஆம் தேதி குன்றத்தூரில் நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் மாவட்டக் கழகச் செயல் வீரர்கள் கூட்டம் வருகிற 30.3.2026 **திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில்** குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் **த.துரைசாமி** தலைமையிலும், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு,** கழக அமைப்புச் செயலாளர் **ஆர்.எஸ்.பாரதி** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள், கழக அணிகளின் மாநில - மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. 2026 - சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து,
2. கழக வளர்ச்சி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இம்மானுவேல் சேகரனார் மிஷன் ஆதரவு!

சென்னை, மார்ச் 27 - நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, 'இம்மானுவேல் சேகரனார் மிஷன்' ஆதரவு தெரிவித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, ஒட்டப்பாலம் "இம்மானுவேல் சேகரனார் மிஷனின்" கௌரவத் தலைவரும் - தியாகி இம்மானுவேல் சேகரனார் முதல் பேரனுமான இரமேஷ் தேவேந்திரர் அவர்கள், நேற்று (26.03.2026) காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற "இம்மானுவேல் சேகரனார் மிஷன்" நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என இரமேஷ் தேவேந்திரர் உறுதி அளித்தார்.



## அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில்

# சட்டமன்றத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் - மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், மார்ச் 27 - அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் சட்டமன்றத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், அரியலூர் மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆயத்தப் பணிகளைத் தீவிரப்படுத்தும் நோக்கில், முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படியும் நடைபெற்ற இந்த கூட்டத்தில், அரியலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

நமது திராவிட மாடல் அரசு கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ள எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்கச் சாதனைகளையும் ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்ப்பதற்கான சிறப்பான வியூகங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் நிர்வாகிகளுடன் ஆலோசனை வழங்கினார்.

மக்களின் பேராதரவோடு, அரியலூர் மாவட்டத்தில் கழகத்தின் மாபெரும் வெற்றியை உறுதி செய்து, கழகத்தின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பணிகள், தேர்தலுக்கான சிறப்பான வியூகங்கள் மற்றும் நமது திராவிட மாடல் அரசின் மகத்தான மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கு வேண்டும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள்,BLA 2,

BDA,BLC உள்ளிட்ட ஒவ்வொருவரும் தங்களது பகுதியில் குறைந்தது 100 நபர்களை சந்திக்க வேண்டும், அவர்களை தினம் தினம் சந்தித்து நமது கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூற வேண்டும், குறிப்பாக பெண்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் கொடுக்கப்பட்ட பல திட்டங்களை எடுத்து கூற வேண்டும், அதேவேளையில் திரும்ப கழகம் ஆட்சி அமைந்தான் தான் இந்த திட்டங்கள், இன்னும் பல திட்டங்கள் உங்களை தேடி வரும் என எடுத்து சொல்லவேண்டும். உங்களுக்காக இன்னும் பல திட்டங்களை கொடுப்பதற்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார் என கூற வேண்டும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் பொறுப்பு ஏற்ற தினத்தில் இருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் மேல் தனி கவனம் செலுத்தி பல ஆயிரம் கோடி சுழல் நிதி கடன் வழங்கி உள்ளார்.

இளைஞர்களின் வாழ்வில் இன்றையதினம் விளையாட்டு மேம்பாட்டு ஆனையத்தின் மூலம் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி அவர்களின் வாழ்கை தரத்தை உயர்த்தி வருகிறார் இதை எல்லாம் இளைஞர்கள் மத்தியில் அனைவரும் எடுத்துக் கூறவேண்டும்,

ஒவ்வொரும் வாக்குச் சாவடி அளவில் மகளிரை ஒருங்கிணைத்து அவர்கள் மூலம் பொதுமக்களிடம் நமது அரசின் சாதனை திட்டங்களை கொண்டு சேர்த்து வாக்குகளை ஈர்க்கும் வகையில் கழக ஆக்கப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மக்களின் நலன் ஒன்றையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் நமது கழகத் தலைவர் - மு.க ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி, மக்கள் பணி யைத் தொடர்ந்து சோர்வின்றி முன்னெடுத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைக்க அனைவரும் ஒன்றாக உழைப்போம்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக மீண்டும் அரியணையில் அமர்த்த அனைவரும் ஒருங்கிணைந்து சோர்வின்றி உழைப்போம்! என கூறினார்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு,

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா. மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளைய ராஜன், நா.கணேசன், கே.ஜி. எஸ்.முருகன், இரா.செந்தில்குமார், நகரக் கழகச் செயலாளர்கள் இரா. முருகேசன், வெ.கொ. கருணாநிதி,பேரூர்ச் செயலாளர்கள். ப.கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், மாவட்டக் கழகப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



## தஞ்சையில் நடிகர் விஜயின் வாகனத்தை பின் தொடர்ந்து சென்று விபத்துக்குள்ளாகி மறைவு! மாணவர்

# விக்னேஷ் இல்லம் சென்றார் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

### பெற்றோருக்கு ஆறுதல் கூறினர்!

தஞ்சை, மார்ச் 27 - தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் கடந்த நான்காம் தேதி தமிழக வெற்றிக்கழகத்தின் நிர்வாகிகள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கேற்க நடிகரும், தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவருமான விஜய் சாலை மார்க்கம் வழியாக திருச்சியிலிருந்து தஞ்சை சென்றார்.

அப்போது இளைஞர்கள், கட்சித் தொண்டர்கள் விஜய்யின் வாகனத்தை பின் தொடர்ந்து சென்றனர். இந்த நிலையில் திருச்சி மேல கல்கண்டார் கோட்டையைச் சேர்ந்த சேர்ந்த மூன்றாம் ஆண்டு கல்லூரி மாணவர் விக்னேஷ் (20), மற்றும் அவரது நண்பர் அருண் (21) ஆகியோர், தங்களது டூவீலரில் விஜய்யின் வாகனத்தை பின் தொடர்ந்து சென்ற போது தஞ்சாவூர் செங்கிப்பட்டி அருகே எதிர்பாராத விதமாக முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.



இந்த விபத்தில் விக்னேஷுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் உடன் பயணித்த அவரது நண்பர் அருணுக்கு கால் முறிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டு உடனடியாக தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

தொடர்ந்து விக்னேஷ் மேல்சிகிச்சைக்காக தஞ்சையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் விக்னேஷ் அங்கிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு கடந்த இரு தினங்களுக்கு முன்பு திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கல்லூரி மாணவர் விக்னேஷ் 23.3.2026 அன்று சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்நிலையில் 25.3.2026 அன்று அவரது இல்லத்திற்குச் சென்று பெற்றோரை சந்தித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆறுதல் கூறினார்.

## தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில்

# இந்தியைத் திணிப்பது சரியல்ல!

### மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 27 - "தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிப்பது சரியல்ல" என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கூறினார்.

இதுகுறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:-

ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கை ஏதோ மிகவும் உயர்ந்த திட்டம் போன்று ஒரு பிம்பத்தை ஏற்படுத்துகிறது. அதில், மாணவர்களுக்கு இந்தியாவில் உள்ள 22 மொழிகளையும், 5 வெளிநாட்டு மொழிகளையும், அதாவது ஸ்பானிஷ் மற்றும் ஜப்பானின் மொழிகள் உள்ளிட்ட வெளிநாட்டு மொழிகளையும் கற்பிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் இது சாத்தியமா? தமிழ்நாட்டில் சுமார் 40,000 பள்ளிகள் உள்ளன இப்பள்ளிகளில் 22 மொழிகளுக்கான ஆசிரியர்களை நியமிப்பதனால் ஏறத்தாழ 8,80,000 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அவர்களுக்கு ரூபாய் 880 கோடி சம்பளமாக வழங்கப்பட வேண்டும். இந்திய நாட்டில் எங்காவது ஒரு பள்ளியிலாவது, இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்?

இந்த நிதியாண்டில் இத்திட்டத்திற்காக அதாவது சமக்ர சிஷா திட்டத்துக் காக, ரூ.47310 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் இத்திட்டத்திற்கு இதுவரை அதாவது 60% சதவீதம் நிதி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டின் இறுதி கட்டத்தில் நாம் உள்ளோம். அப்படியாயின், இந்த நிதி ஏன் இன்னொரு மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்படவில்லை இந்த நிதி ஒதுக்கீட்டிலும் மாநிலங்களுக்கு இடையே பாரபட்சம் காட்டப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலத்துக்கு ஒரு ரூபாய் கூட இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படவில்லை. தமிழகத்துக்கு, இத்திட்டத்தின் கீழ் 30% சதவீதம் நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கான விளக்கங்களை அளிக்க ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவாரா ?

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களின் கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி அவர்க ளின் பதில் வருமாறு:-

உறுப்பினர்கள் பல கேள்விகளை எழுப்பியுள்ளார். முதலில் பல மொழிகள் கற்பிக்கப்படும் திட்டம் குறித்து கேட்கிறார் என்று கருதுகிறேன்.

உறுப்பினர் அவர்களே ஒரு மருத்துவராக உள்ளார். அவர் பலமொழிகள் கற்பதன் பயனை அறிவார் என்று நம்புகிறேன். இளம் வயதில் புதிய மொழிகளைக் கற்பிப்பது சுலபம். அதனால் தான் மும்மொழி திட்டத்தை அமல்படுத்த முயல்கிறோம். எனவே மாநில அரசுகள் மாணவர்களது தாய் மொழி மற்றும் இன்னொரு மொழியை மூன்றாவது முறையாக கற்பிக்க வேண்டும் என்று பதிலளித்தார். அடுத்ததாக, தமிழ்நாடு, இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுகிறது. உறுப்பினரது கட்சியும் இருமொழிக் கொள்கையைத் தான் பின்பற்றுவோம் என்கிறது. தேசிய கல்விக் கொள்கையில் மூன்றாவது மொழியை கற்க வேண்டும் என்று சொல்கிறோம். அது இந்தி திணிப்பு ஆகாது என்று கூறினார். மேலும் சமக்ர சிஷா திட்டத்தின் கீழ் ரூ.538 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

**மொழி கருத்தை பரிமாறும் கருவி - அது அறிவு ஆகாது!**

டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் மீண்டும் எழுந்து எங்கள் தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல மற்ற தென்னிந்திய மாநிலங்களுக்கான ஆந்திரா, தெலுங்கானா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து ஜப்பான், ஸ்பெயின், பிரான்சு முதலான பல்வேறு நாடுகளுக்கு கல்விக்காகவும் வேலைக்காகவும் பலர் செல்கின்றனர் அப்போது, அவர்களின் தேவைக்கேற்றவாறு அந்த நாடுகளின் மொழி களைக் கற்கின்றனர்.

எனவே, மாணவர்களைத் தேவையின்றி மூன்றாவது மொழி என்னும் பெயரில் இந்தியைத் திணிப்பது சரியன்று. மொழி என்பது நமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் ஒரு சாதனம் மட்டுமே அது கணிதம் மற்றும் அறிவியல் போன்று மாணவர்களின் அறிவை வளர்க்கும் படிப்பு இல்லை. எனவே, மாணவர்களுக்கு மூன்றாவது மொழி என்னும் பெயரில் ஒரு மொழியை திணிக்க கூடாது என்று கூறினார்.

மேலும் ஒன்றிய துணை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு சமக்ரா சிக் ஷா திட்டத்தின் கீழ் ரூ.500 கோடி அளவிற்கு கொடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். ஆனால் இத்திட்டத்தின் கீழ் இன்னமும் சுமார் ரூபாய் 3500 கோடி கொடுக்கப்படாமல் நிலுவையிலுள்ளது அதனை உடனடியாக வழங்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் இந்தி மொழித் திணிப்புக்குத் தனது எதிர்ப்பினை மக்களவையில் பதிவிட்டார்.